**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**I.A.No.08/2025 In O.S.No.89/2021**

சங்கப்பிள்ளை
(பொது அதிகார முகவர் புண்ணியமூர்த்தி) ... மனுதாரர்/வாதி

**//எதிராக//**

1. சிவகுமார்
2. மாரியாயி
3. பெரியக்காள்
4. தாமரை
5. லதா
6. வடிவேல்
7. மேற்பார்வை பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம், கரூர்
8. உதவி மின் பொறியாளர்,
தமிழ்நாடு மின்சார வாரியம், கொசூர், கரூர்
9. மாவட்ட ஆட்சியர், கரூர் மாவட்டம்
10. வட்டாட்சியர், கடவூர் வட்டம்

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 26.09.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.M.புவனேஸ்வரி அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 4 மற்றும் 5,6 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.கிருஷ்ணசாமி அவர்கள் முன்னிலையாகியும், 7 முதல் 10 எதிர்மனுதாரர்கள் அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது தொண்டமாங்கின கிராம நிர்வாக அலுவலருக்கு சாட்சிய அழைப்பாணை அனுப்ப உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 16 விதி 1–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்</u>**

1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. இவ்வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு நிலுவையில் இருந்த போது மனுதாரரின் தந்தைக்கு கொரோனா நோய் தொற்றால் காது கேட்காத அளவிற்கு பாதிப்பு ஏற்பட்டது. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வாதி மனுதாரருக்கு ஒரு பொது அதிகாரம் கொடுத்துள்ளதாகவும் எனவே தனது தந்தை சார்பாக சாட்சியம் அளிப்பதாகவும் தங்கள் சொத்துக்கள் குறித்து கிராம நிர்வாக அலுவலர் வசமுள்ள ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்க வேண்டியது அவசியம் என்பதால் கிராம நிர்வாக அலுவலருக்கு சாட்சிய அழைப்பாணை அனுப்ப உத்தரவிடக்கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்து 2 முதல் 6 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொண்ட எதிருரையின் சுருக்கம்</u>**

2) மனுவில் கூறப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானது. மனுவில் கண்டுள்ள கிராம நிர்வாக அலுவலர் எந்த ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை. கிராம நிர்வாக அலுவலர் வட்டாட்சியர் உத்தரவின்படி தான் ஆவணங்களை தாக்கல் செய்ய இயலும். மனுவில் காட்டப்பட்டுள்ள ஆவணங்களுக்கான நகல்களை மனுதாரர் பெற்று தாக்கல் செய்ய இயலும் என்பதால் இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**<u>7 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>**

3) மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது. மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் ஏதுமின்றி சாட்சியை சேகரிக்க வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கேட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் பொது ஆவணங்கள் ஆகும். அவற்றை நகல் பெற்று தாக்கல் செய்ய இயலும். இவ்வழக்கை காலதாமதப்படுத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u>**

5) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் தாவா சொத்திற்குரிய UDR திட்டத்திற்கு முந்தைய கணக்கு விபரங்கள் அடங்கிய பதிவேடுகளை ஆஜர்படுத்தி சாட்சியம் அளிக்க கிராம நிர்வாக அலுவலரை விசாரிக்க அனுமதி கோரியுள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் மேற்படி மனுவிற்கு ஆட்சேபனை செய்யப்பட்டது. மனுதாரர் நில உடமை மேம்பாட்டு திட்டத்திற்கு முந்தைய ஆவணங்கள் தனது தரப்பு வழக்கை நிரூபிக்க அவசியம் ஆனவை என வாதிட்டது ஏற்கத்தக்கதாக உள்ளது. மேற்படி ஆவணங்களை எளிதில் நகல் பெற இயலாது என்பதால் மனுதாரர் கிராம நிர்வாக அலுவலரை விசாரிப்பது வழக்கிற்கு உகந்ததாக இருக்குமென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**************************************

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**குளித்தலை**

**I.A.No. 08/2025**
**in**
**O.S.No. 89/2021**

**DRAFT / FAIR ORDER**

**D.D.24.10.2025**

**************************************